செய்தி வெளியீடு நாள்: **22.11.2024**

**சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 30-ஆம் தேதி வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் பிறத் துறைகளில் உள்ள முடிவுற்றப் பணிகளின் திறப்பு விழா என மொத்தம் சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் மாபெறும் விழா நடைபெறவுள்ளது.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தபின் தகவல்.**

**••••••••**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** வருகின்ற 30-ஆம் தேதி சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் 1,476 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் பிறத் துறைகளில் உள்ள முடிவுற்றப் பணிகளின் திறப்பு விழா என மொத்தம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று (22.11.2024) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் சென்று ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தை பொறுத்தளவில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** நேரடி பார்வையில் **மாண்புமிகு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்** அவர்களுடைய பலகட்ட ஆய்வுகளுக்குப் பிறகு ஏற்கெனவே

14.03.2024 அன்று தங்க சாலையில், ரூ.4000 கோடிக்கு அதிகமான திட்ட பணிகளை துவக்குகின்ற பணியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக, இன்று சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் சுமார் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் 700 குடியிருப்புகளும் மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை அருகில் நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான இடத்தில் சுமார் 3.16 ஏக்கர் நிலப்பரப்பில் 776 குடியிருப்புகளும் என மொத்தம் 1,476 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான அடிக்கல்நாட்டு விழா மற்றும் பிறத் துறைகளில் உள்ள முடிவுற்றப் பணிகளின் திறப்பு விழா என மொத்தம் சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் வருகின்ற 30-ஆம் தேதி மாபெறும் விழாவாக நடைபெறவிருக்கின்றது, அதன் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தோம்.

தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார துறை, மக்கள் நல்வாழ்வு துறை மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி ஆகிய துறைகளின் தொடங்கப்பட இருக்கின்ற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகின்ற பணியும் அதேபோல் முடிவுற்ற பணிகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கின்ற இனியதோர் நிகழ்வை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடசென்னை பொறுத்தவரை அனைத்து வகையலிலும் இந்த மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்காக அந்த மக்களுக்கு தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளையும் கட்டமைப்புகளையும் உருவாக்குகின்ற தொலைநோக்கு பார்வையோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24x7 என்கிற வகையில் அனுதினமும் அனுநேரமும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அவர்களுடைய முழு சிந்தனையும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் அவர் ஏற்குகின்ற அந்த திசை நோக்கி சென்னையில் இருக்கின்ற அனைத்து துறை அதிகாரிகளையும் இது சம்பந்தப்பட்ட அனைத்து துறை அமைச்சர்களையும் ஒருங்கிணைத்து இந்த திட்டப் பணிகளை விரைவுப்படுத்த **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதிய அதிகாரிகளும் இதற்கான முக்கியத்துவத்தை உணர்ந்து பெரும் அளவில் இதுவரை இல்லாத அளவிற்கு காலை, மாலை, மதியம் மற்றும் இரவு என்று பாராமல் எல்லா நேரத்திலும் இந்த பணிகளுடைய முன்னேற்றத்திற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்புப் பொறியாளர் திரு.இளம்பரிதி, தமிழ்நாடு மின்சாரத்துறை கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) திரு.ஜெயச்சந்திரன், சென்னை குடிநீர் வழங்கல் துறை கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமலு, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், மாமன்ற உறுப்பினர் திரு.ராஜேஷ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.